**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.2/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுலை மாதம் 21 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாராயணா | மதம் | : இந்து |
| த/பெ | : சீனிவாசலு நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : K.G. கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**21.07.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4. நான் தொலைபேசி அலுவலகத்தில் பாதுகாவலராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி வெங்கடேசலுவும் தொலைபேசி அலுவலகத்தில் பாதுகாவலராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். நானும் பிரதிவாதியும் ஒன்றாக பணிக்கு சென்று ஒன்றாக வீடு திரும்புவோம் என்றால் சரிதான். என் தங்கை சாந்தியின் மகன் பெயர் யுகேந்திரன் என்றால் சரிதான். சூர்யா என்பவரை தெரியுமா என்றால் தெரியும். யுகேந்திரன், சூர்யா இருவரும் குவைத்தில் பணிபுரிந்தார்கள் என்றால் சரிதான். யுகேந்திரன், சூர்யா இருவரும் குவைத்தில் பணிபுரிவதற்கு வடிவேலு என்பவரது நிறுவனம் மூலமாக ஏற்பாடு செய்தோம் என்றால் சரிதான். என் மகன் பெயர் என்ன என்றால் பிரேம் குமார் ஆகும்.

5. பிரேம் குமாருக்கு ஆக்சிஸ் வங்கியில் கணக்கு உள்ளது என்றால் சரிதான். பிரேம் குமாரின் வங்கி பரிவர்தனை எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த பரிவர்தனைகளை நான்தான் செய்கிறேன். பிரதிவாதியின் மகன் பெயர் நாகார்ஜுனா என்றால் சரிதான். அவரது வங்கி கணக்குகளை பிரதிவாதிதான் செய்து வந்தார் எனக்கு தெரியாது. எனது மகன் பிரேம் குமார் வெளிநாட்டில் குவைத்தில் உள்ளார் என்றால் சரிதான். தற்போது வந்துவிட்டார். பிரதிவாதியின் மகன் நாகார்ஜுனா என்ன படிக்கிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் இருவரது மகன்களையும் வெளிநாட்டிற்கு அனுப்பலாம் என்றும் விசா ஏற்பாடு செய்து தருவார்கள் என்றும் பிரதிவாதியிடம் சொன்னேன் என்றால் இல்லை. பணம் இல்லாமல் மகனை வெளிநாட்டிற்கு எப்படி

அனுப்ப முடியும் என பிரதிவாதி என்னிடம் சொன்னார் என்றாலும் நான் அதை மறுத்து பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. நான் பணம் தேவையில்லை என்றும் இருவரது பிள்ளைகளையும் வெளிநாட்டிற்கு அனுப்ப நானே பணம் ஏற்பாடு செய்து தருவதாக பிரதிவாதியிடம் சொன்னேன் என்றால் இல்லை. நான் பணம் ஏற்பாடு செய்து தருவதாக சொன்னேன் என்றாலும் அதற்கு ஆதரவாக பிரேம்குமார் கணக்கில் இருந்து பணம் அனுப்பியதற்கான ஒப்புகைச்சீட்டு அசல் (Counter file) பிரதிவாதியிடம் நான் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. 2019ல் என் மகன் இந்தியாவில்தான் கே.ஜி கண்டிகையில்தான் இருந்தாரா என்றால் ஞாபகமில்லை. அவரை எப்போது எந்த மாதம் எந்த தேதியில் வெளிநாட்டிற்கு அனுப்பினேன் என்றால் ஞாபகமில்லை. என் மகன் பிரேம்குமாருக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏதேனும் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் இல்லை.

7. என் மகன் பிரேம்குமாருக்கும் பிரதிவாதிக்கும் இடையே பேச்சுவார்த்தை இல்லாத நிலையில் என் மகனது வங்கி பரிவர்த்தனைகள் பிரதிவாதியிடம் இருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும் நான் பணத்திற்காக ஏற்பாடு செய்வதற்கு ஆதரவாக என் மகன் பெயரிலுள்ள counter file அசல் பிரதிவாதியிடம் உள்ளது என்றால் வெளிநாடு செல்வதற்காக ஏற்பாடு செய்ய சொன்னதால் டிக்கெட் போடுவதற்காக ரூ.2 லட்சம் 10ம் தேதி நான் பிரதிவாதியிடம் கொடுத்தேன். 16ம் தேதி என் அம்மாவின் பணம் ரூ.1,40,000ம் என் பணம் ரூ.40,000ம் பிரதிவாதியிடம் கொடுத்தேன். நான் பணமாக கொடுத்தேனா அல்லது பிரேம்குமாரின் கணக்கில் இருந்து பணம் அனுப்பினேனா என்றால் இல்லை வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். வங்கி கணக்கில் அனுப்பவில்லை.

8. நான் என் மகன் வங்கி கணக்கு மூலம் மேற்படி பணத்தை வேறு ஒருவருக்கு பிரதிவாதி சரி செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. நான் வெளிநாடு அனுப்புவதற்காக பணம் முழுவதும் வடிவேலு என் இடைத்தரகரிடம்தான் கொடுத்தேன் என்றாலும் பிரதிவாதியிடம் எந்த தொகையும் நான் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அதற்காகதான் நான் வெங்கடேசலுவிடம் 4 வெற்று கடனுறுதிச்சீட்டுகளில் கையெழுத்து பெற்றுக்கொண்டேன் என்றால் நான்கு கடனுறுதிச்சீட்டுகள் எழுதி வாங்கினேன். அந்த பணம் வடிவேலுவின் மனைவி

கிருஷ்ணம்மாள் பெயரில் நான் அந்த பணத்தை கொடுத்துள்ளதாக நான் பிரதிவாதியிடம் சொன்னேன் என்றால் இல்லை. பிரதிவாதி வடிவேலுவிடம் சென்று கேட்ட போது யுகேந்திரனுக்கும் சூர்யாவிற்கு மட்டும் விசா வந்துள்ளதாகவும் என் மகனுக்கு விசா வரவில்லை என்று வடிவேலு சொன்னார் என்றால் இல்லை. அந்த கணக்கு எப்போதோ முடிந்துவிட்டது. இது தனியாக அவர் வாங்கிய கடனாகும்.

9. பிரதிவாதியின் மகனுக்கு வெளிநாட்டில் வேலை வரவில்லை என்றும் எனவே தான் எழுதி கொடுத்த கடனுறுதிச்சீட்டுகளை திருப்பி கேட்டு அதனால் எங்கள் வீட்டில் பெரும் சண்டை வந்தது என்றால் பொய். நான் பிரதிவாதியிடம் எந்த பணமும் கொடுக்கவேயில்லை என்றால் சரியல்ல. யுகேந்திரனுக்கும் சூர்யாவிற்கும் வெளிநாட்டிற்கு அனுப்ப எவ்வளவு செலவானது என்றால் எனக்கு தெரியாது. தனிநபராக வெளிநாட்டிற்கு அனுப்பினால் அதிகம் செலவாகும் என்றும் இரண்டு பேரும் சேர்ந்து அனுப்பினால் செலவு குறையும் என்று நான் வெங்கடேசலுவிடம் சொன்னேன் என்றால் இல்லை. பிரதிவாதி ஏமாற்றப்பட்ட பின்பு தான் மீண்டும் தன் மகனை சொந்த பணத்தை வைத்து வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்தார் என்றால் இல்லை.

10. நான் பிரதிவாதி பலமுறை கேட்டும் கடனுறுதிச்சீட்டுகளை திருப்பி கொடுக்காமல் பொய்யாக அவரை பொறுப்புக்குள்ளாக வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பொய். பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும் பிரதிவாதி திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் பிரதிவாதி எனக்கு எந்த தொகையும் திரும்ப தர வேண்டியது இல்லை என்றாலும் சரியல்ல. கடனுறுதிச்சீட்டை யார் எழுதினார் என்றால் பரந்தாமன் எழுதினார். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியாது. பரந்தாமனின் முதலெழுத்து (initial) என்ன என்றால் அவர் தெலுங்கில் எழுதியுள்ளார். மற்ற சாட்சிகள் யார் என்றால் ராஜரத்தினம் ஆவார். ராஜரத்தினம் எனக்கு உறவினரா என்றால் ஆமாம். நான் பணம் கொடுக்கும்போது யார் நேரடியாக பார்த்தார்கள் என்றால் 2 கடனுறுதிச்சீட்டு எழுதும்போது ராஜரத்தினம் பார்த்தார். மற்ற இரண்டு கடனுறுதிச்சீட்டுகளை வெங்கடேசலு வாங்கி சென்று சாட்சி கையெழுத்து வாங்கி கொண்டு வந்தார்.

11. கடனுறுதிச்சீட்டை எழுதியவர் பணம் கொடுத்ததை பார்க்கவில்லை என்றால் அவர் பார்த்தார். வெற்று கடனுறுதிச்சீட்டுகளில் பிரதிவாதி கையெழுத்து

செய்து கொடுத்தார் என்றாலும் அதை நான் நிரப்பினேன் என்றாலும் அதனால்தான் தமிழாக்கத்தில் கடனுறுதிச்சீட்டு எழுதியவர் பெயரே குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் கடனுறுதிச்சீட்டை தெலுங்கில்தான் தாக்கல் செய்துள்ளேன். அதில் வெங்கடேசலு ஆங்கிலத்தில் இரண்டு இரண்டாக 8 கையெழுத்து செய்துள்ளார். கடனுறுதிச்சீட்டை நான் தமிழ் மொழிப்பெயர்ப்பு செய்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

12. வாசு, வேலு யாரையாவது தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் எனது உறவினர்களா என்றால் தெரியாது. எனக்கு தெலுங்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் எனக்கு கையெழுத்து மட்டும்தான் போட தெரியும். பரந்தாமன் என்பவர் என்ன படித்துள்ளார் என்றால் பத்தாம் வகுப்பு படித்துள்ளார். பரந்தாமன் எந்த மொழியில் பள்ளிப்படிப்பு படித்தார் என்றால் தெலுங்கில் படித்தார். பரந்தாமன் அந்த ஊரில் கடனுறுதிச்சீட்டு எழுதுவாரா என்றால் அவர் உணவகம் வைத்துள்ளார். யாராவது கேட்டால் எழுதுவார். வழக்கின் சாட்சிகளை நான் விசாரணை செய்ய போகிறேனா என்றால் ஆமாம். பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பில் உள்ள விவரங்கள் தவறு என நான் ஏதேனும் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஆமாம்.

13. 2019ல் ஒரு நபரை குவைத்திற்கு அனுப்ப ரூ.6 லட்சம் ஆகும் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தை நான் எனது வழக்கறிவிப்பில் சொல்லியுள்ளேன் என்பது தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி என்னிடம் இருந்து எந்த பணமும் பெறாத நிலையில் நான் பிரதிவாதியிடம் இருந்து நான்கு கடனுறுதிச்சீட்டுகளை எழுதி பெற்றுள்ளேன் என்றால் இல்லை. அந்த 4 கடனுறுதிச்சீட்டுகளையும் பிரதிவாதி மொத்தமாக என் கையில்தான் கொடுத்தார் என்றாலும் தனித்தனியாக என் கையில் கொடுக்கவில்லை என்றாலும் சரிதான். நான் பிராதில் கூறியுள்ள விவரங்களும் நான் தற்போது சாட்சியத்தில் கூறும் விவரங்கள் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்துமே பிரதிவாதி என்னிடம் இருந்து எந்த பணமும் பெறாத நிலையில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)